**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.272/2015</u>**

2022-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.கோமதி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | -திருமதி. கோமதி |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.சரவணன் |
| கிராமம் | - |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | -துணை வட்டாட்சியர் தேர்தல், வந்தவாசி. |

<u>13.10.2022</u>

<u>நீ.ம.சா.1.</u>

## பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

புதிய சர்வே எண்.146/13ன் பழைய சர்வே எண்.146/1 என்று சொன்னால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களின்படி தற்போது மேற்படி சர்வே எண்ணுக்கான கிராம சிட்டா பக்தவச்சலம் என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி சொத்திற்கான பட்டா எண்.335 பக்தவச்சலம் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பக்தவச்சலம் பெயரில் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளதாக சுரேஷ் என்பவர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார். மேற்படி மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு பக்தவச்சலம் மற்றும் சுரேஷ் ஆகியோரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற சான்றாவணம் 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி நீதிமனற் சான்றவாணம் 5ல் பக்தவச்சலம் கொடுத்த வாக்குமூலத்தில் கடந்த 27.11.2003ல் கிரையம் பெற்ற சொத்தினை என் பெயரில் பட்டா எண்.335 பரப்பில் 255 சதுர மீட்டர் தனி வட்டாட்சியரால் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பக்தவச்சலம் கொடுத்த ஆவணத்தை பரிசீலனை செய்துதான் அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக பட்டா மாற்றம் செய்யகோரி ஒரு நபர் மனு அளித்தால் அந்த இடத்தில் அவர் கிரையம் பெற்றதற்கான ஆவணங்கள் முறையாக பரிசீலனை செய்து அதன் பின்னரே பட்டா வழங்கப்படுவது வழக்கம்.